# அக்டோபர் – 27 – சனி

**புனித புருமென்சியுஸ்**

**“மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள்.” (லூக் 13:3)**

## முதல் வாசகம் : எபேசியர் 4 : 7 - 16

சகோதர சகோதரிகளே!,கிறிஸ்து கொடுக்கவிரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது. ஆகையால்தான், ”அவர் உயரே ஏறிச்சென்றார் அப்போது, சிறைப்பட்ட கைதிகளை இழுத்துச்சென்றார் மனிதருக்குப் பரிசுகளை வழங்கினார்” என்று மறைநூல் கூறுகிறது.”ஏறிச் சென்றார்” என்பதனால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா?. கீழே இறங்கியவர்தான் எங்கும் நிறைந்திருக்கும்படி எல்லா வானுலகங்களுக்கும் மேலாக ஏறிச்சென்றவர்.அவரே சிலரைத் திருத்தூதராகவும் சிலரை இறைவாக்கினராகவும், வேறுசிலரை நற்செய்தியாளர்களாகவும் ஏற்படுத்தினார்.திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக்கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்.அதனால் நாம் எல்லாரும் இறை மகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்.ஆகவே இனி நாம் குழந்தைகளைப்போல் இருக்கக் கூடாது. மனிதருடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் தவறுக்கு வழிநடத்தும் ஏமாற்று வழிகளையும் நம்பி, அவர்களுடைய போதனைகள் என்னும் காற்றால் அடித்துச்செல்லப்பட்டு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படக்கூடாது. மாறாக, அன்பின் அடிப்படையில் உண்மை பேசி, தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும். அவரால்தான் முழுஉடலும் இசைவாய்ப் பொருந்தித் தன்னிடமுள்ள தசை நார்களால் இறுக்கிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உறுப்பும் தனக்கே குறிக்கப்பட்ட பணியைச் செய்வதால் உடல் வளர்ச்சிபெற்று, அன்பால் கட்டமைப்புப் பெற்று வளர்ச்சியடைகிறது.

**பதில்பாடல் :** அகமகிழ்வோடு ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்.

## நற்செய்தி : லூக்கா 13 : 1 - 9

அக்காலத்தில்ல் சிலர் இயேசுவிடம் வந்து, பலிசெலுத்திக் கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக,“இக்கலிலேயருக்கு இவ்வாறு நிகழ்ந்ததால் இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும் விடப்பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. அவர்கள் எருசலேமில் குடியிருந்த மற்ற எல்லாரையும்விடக் குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம்மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்“ என்றார்.மேலும், இயேசு இந்த உவமையைக் கூறினார்: “ஒருவர் தம் திராட்சைத்தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டுவைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை எனவே அவர் தோட்டத் தொழிலாளரிடம், “பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்திமரத்தில் கனியைத் தேடிவருகிறேன் எதையும் காணவில்லை. ஆகவே இதைவெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக் கொண்டிருக்க வேண்டும்?“ என்றார். தொழிலாளர் மறுமொழியாக, “ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும் நான் இதைச்சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி இல்லையானால் இதை வெட்டிவிடலாம்“ என்று அவரிடம் கூறினார்.

**தியானம் :** இவ்வுலகில் இடம்பெறும் நிகழ்வுகள் எம்மை கலக்கத்தில் ஆழ்த்துகின்றன. ஆலயங்களில் வழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் சுடப்படுகின்றார்கள். எந்நேரம் எங்கே என்ன நடக்கும் என்று தெரியாது. சில இடங்களில் மக்கள் வெளியே நடமாட தயங்குகின்றார்கள். பலர் கூடும் இடங்களிற்கு செல்ல பயப்படுகின்றார்கள். இவை எல்லாமே எமக்கு ஒரு எச்சரிக்கையாகவே அமைந்துள்ளது. மனம் மாறாவிட்டால் நாமும் அழிவை சந்திக்க நேரிடும் என்ற வார்த்தையை இன்றைய நற்செய்தியில் யேசு இருமுறை பயன்படுத்துகின்றார். ஏன் என்றால் அழிவு மிகக் கொடியது. அதனை தாங்கும் சக்தி எமக்கு கிடையாது. இன்று பலர் களியாட்டங்களிலும், மதுபானங்களிலும், போதைப் பொருட்களிலும் இன்பம் காண்கின்றார்கள். அவைதான் உலகம் என்று அதன் பின்னால் திரிகின்றார்கள். கடவுளுக்கு நேரம் ஒதுக்க, ஆலய வழிபாடுகளில் பங்குபற்ற விருப்பம் இல்லை. இதன் முடிவு? கொலை, தற்கொலை எல்லாம் எதனால் ஏற்படுகின்றன. பல பிரபல்யமானவர்கள், நடிக நடிகையர், கோடீஸ்வரர்கள் தற்கொலை செய்துகொள்கின்றார்கள். அவர்களிடம் என்ன இல்லை. பணம், பொருள், புகழ் எல்லாமே அவர்களிடம் இருந்தும் மகிழ்ச்சி, நிறைவு இல்லாததால், உண்மையான உறவுகள் இல்லாததால், வாழ்வு வெற்றிடமானதால் அவர்கள் தமது முடிவை தாமே தேடிக் கொள்கின்றார்கள். எனவே நாமும் மிக மிக கவனமாக இருக்க வேண்டும், நிலையில்லாத செல்வங்களிற்கு அடிமை ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் . நிலையான செல்வமாகிய கடவுளை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். அப்போது அவர் நம்மை அழிவில் இருந்து பாதுகாப்பார்.